| | | |
|---|---|---|
| சாட்சி : DW1<br>மொட்டையாண்டி, த/பெ பெரியசாமி | அ.வ.எண்.13/2021 | 06.04.2026 |

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. எனது தாத்தா பெயர் மருதை. மேற்படி மருதைக்கு இரண்டு குழந்தைகள் மூத்தவர் பெரியசாமி, இளையவர் மாசி. பெரியசாமியும், மாசியும் ஒன்றாக எனது தாத்தா இருந்த போது வசித்து வந்தார்களா என்றால் எனக்கு விவரம் தெரிந்த போது எனது தாத்தா இல்லை. எனது அப்பாவிற்கும், சித்தப்பாவிற்கும் சிறு வயதாக இருக்கும் போதே எனது தாத்தா இறந்துவிட்டார்.
2. எனது அப்பாயி பெயர் மருதாயி. எனது அப்பா மற்றும் சித்தப்பாவை மேற்படி மருதாயி தான் வளர்ந்தார்கள் என்றால் சரியல்ல. மருதாயி தான் மேற்படி இருவரையும் அவர்களது சிறு வயதில் வளர்த்து வந்தார் என்றால் சரியல்ல. பெரியசாமியும், மாசியும் தனித்தனியாக தான் இருந்தார்கள். சேர்ந்து இருக்கவில்லை. இந்த வழக்கு சொத்தை தவிர வேறு சொத்துக்கள் எங்களுக்கு இருக்கிறது என்றால் குடும்ப சொத்துக்கள் உள்ளது. வீட்டு மனைகள் உள்ளதா என்றால் உள்ளது. பூர்வீக நிலம் எங்களுக்கு இருந்தது என்றால் இல்லை.
3. எனது அப்பா மற்றும் சித்தப்பா சேர்ந்து குடும்ப சொத்துக்களை விற்பனை செய்துள்ளார்கள் என்றால் மேற்படி விவரம் எனக்கு தெரியாது. எனது அப்பா தான் வீட்டின் மூத்த ஆண்மகன் என்றால் சரிதான். அதனால் தான் 12.08.1958 ல் தாவா சொத்து எனது அப்பா பெயரில்

கிரையம் வாங்கப்பட்டது என்றால் பாகம் பிரித்த பின்னர் தான் கிரையம் வாங்கினார். எனக்கு தற்போது 73 வயதாகிறது. மேற்படி தாவா சொத்து கிரையம் வாங்கி 68 ஆண்டுகள் ஆகிறது என்றால் சரிதான்.

4. 1954 ம் ஆண்டு பாகம் பிரிக்கப்பட்டதற்கு பின்னர் மேற்படி சொத்து எனது அப்பா பெயரில் வாங்கப்பட்டது. பாகம் பிரிவினை ஏற்பட்ட போது எனக்கு 2 வயது இருக்கும். எனக்கு எனது அப்பா சொல்லி தான் மேற்படி பாகப்பிரிவினை பற்றி தெரியும். நான் சொல்வது போல் 1954 ல் பாகம் பிரிந்திருந்தால் எனது அப்பாவும், சித்தப்பாவும் சேர்ந்து 11.09.1967 ல் கிரைய ஆவணம் ஏற்படுத்திருக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல.

5. 1954 ம் ஆண்டு எனது அப்பாவிற்கும், எனது சித்தப்பாவிற்கும் இடையில் பாகப்பிரிவினை ஏற்பட்டதற்கு என்னால் சாட்சியத்தை முன்னிலைப்படுத்த முடியுமா என்றால் ஆவணங்கள் எதுவும் இல்லை. உண்மையில் பாகம் பிரித்திருந்தால் ஊரில் உள்ள நபர்களுக்கு அது பற்றி தெரிந்திருக்கும் என்றாலும், நான் சொல்வது போல் பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்பதால் தான் என்னால் சாட்சியத்தை முன்னிலைப்படுத்த முடியவில்லை என்றால் சரியல்ல.

6. நான் சொல்வது போல் பாகப்பிரிவினை ஏற்பட்டிருந்தாலும், தாவா சொத்து எனது அப்பாவின் பெயருக்கு தனித்து ஒதுக்கப்பட்டிருந்தாலும், ஊரில் உள்ள நபர்கள் எனக்கு

ஆதரவாக சாட்சியம் அளிப்பார்கள் என்றால் அது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்பதாலும், ஊரில் உள்ள நபர்களுக்கு தெரிவதற்கு வாய்ப்பில்லை. எனக்கு விவரம் தெரிந்த காலத்திலிருந்து தாவா சொத்தை எங்கள் குடும்பத்தார் தான் அனுபவித்து வருவதற்கு ஊரில் உள்ள நபர்கள் சாட்சியம் அளிக்க வருவார்களா என்றால் வரமாட்டார்கள். பாகம் பிரித்து வழக்கு சொத்தை வாதி தரப்பில் அனுபவம் செய்துவருவதால் தான் ஊரில் உள்ள நபர்கள் சாட்சியம் அளிக்க வரமாட்டார்கள் என்றால் சரியல்ல.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க 09.04.2026 அன்று குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**Signed,**
மொட்டையாண்டி

| |
|---|
| சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார் |

PRAGATHEESHWARAN SUBRAMANIAN
Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
இலால்குடி.